ஆகவே இப்பொழுது “இவர்கள் இப்பொழுது உங்கள் காலின் மேல் மிதிப்பார்கள், பிறகு உன் இருதயத்தை மிதிப்பார்கள்” என்னும் பழைய பழமொழி உங்களுக்குத் தெரியும், ஆனால் இவர்களை நாம் கர்த்தரிடம் பிரதிஷ்டை செய்துவிட்டால் அவ்வண்ணமாய் இருக்கும் என்று நான் விசுவாசிப்பதில்லை

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: அடையாளம்

# 63-09-01

14 இப்பொழுது இங்கே இரண்டு அருமையான சிறு பையன்கள் இருக்கின்றனர். என்னே! அப்படியானால் மூன்றுபேர் இருக்கின்றார்களா? நல்லது, அது ஒரு முழு குடும்பம் ஆகும். உன்னுடைய பெயர் என்ன? [அந்தப் பையன் “மைக்கேல்” என்கின்றான்.) மைக்கேல்.

உன்னுடைய பெயர்? [அடுத்த பையன் “பவுல்” என்று கூறுகிறான்.) பவுல் என்ன அருமையான பெயர்கள்! உன்னுடையது என்ன? [சிறுமி “டெப்பி” என்கின்றாள்.) தெபொரா, அது உண்மையாகவே அருமையானது. மைக்கேல், மற்றும் பவுல், மற்றும் தெபொரா. ஆகவே உங்களுடைய கடைசி பெயர் என்ன? (தகப்பன் “எல்லிஸ்” என்று கூறுகின்றார்.) எல்விஸ்? [“ஆம்.”) நல்லது, அது ஒரு மகத்தான அருமையான சிறு குடும்பம் என்றே

நான் உங்களிடம் கூறிக்கொண்டிருக்கின்றேன்.



15 உங்களுக்குத் தெரியுமா, இதைப் போன்ற சிறு நபர்களை நான் பார்க்கையில், நான் சிறு பையனாக இருந்த நினைவிற்கே மறுபடியுமாக அது எப்பொழுதும் என்னைக் கொண்டு செல்கின்றது.

ஆகவே இப்பொழுது “இவர்கள் இப்பொழுது உங்கள் காலின் மேல் மிதிப்பார்கள், பிறகு உன் இருதயத்தை மிதிப்பார்கள்” என்னும் பழைய பழமொழி உங்களுக்குத் தெரியும், ஆனால் இவர்களை நாம் கர்த்தரிடம் பிரதிஷ்டை செய்துவிட்டால்

அவ்வண்ணமாய் இருக்கும் என்று நான் விசுவாசிப்பதில்லை.





இங்கே நமக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது, தேவன் இதை உங்கள் கரத்தில் வைத்திருக்கின்றார்.

## உங்களிலிருந்து ஒரு பிரசங்கியை அவர் உண்டாக்கினார்.





எப்பொழுதுமே நான் பெண் பிரசங்கிகளைக் குறித்து கூறினதுண்டு, உங்களுக்குத் தெரியும், ஆனால் ஒவ்வொரு தாயும் ஒரு பிரசங்கியாவாள், இதோ அவள் சபை.

பாருங்கள், தந்தை வேலை செய்கையில், இந்த சிறிய பையன்களை சரியாக வளர்க்க வேண்டியவளாக இருக்கின்றாள். ஆகவே உங்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது. தேவன் உங்கள் இருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஒரு அருமையான குடும்பத்தை நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள்.

